**கவனிக்க.-** 2009.05.07 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1603 - 2009 මැයි මස 22 වැනි සිකුරාදා - 2009.05.22

*1603 ஆம் இலக்கம் – 2009 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 608 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 609 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | – | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | – |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | – | ஏல விற்பனைகள் | 611 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | – | நானாவித அறிவித்தல்கள் | – |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வராராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பததிர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2009, மே மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, மே மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## காணி, காணி அபிவிருத்தி அமைச்சு

இலங்கை நிலஅளவைத் திணைக்களம்

**கேள்வி மனு கோரல்**

*பிரதேச நிலஅளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெறுதல் - 2009*

*கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நிலஅளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நிலஅளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் மனுகோரல்கள் 2009.06.10 அன்று பகல் 02.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். மனுகோரல் விண்ணப்ப மாதிரிப்படிவங்களும் குறித்த விபரங்களும் அந்தந்த மாகாண நிலஅளவையாளர் நாயகத்தின் அலுவலகத்திலும் மற்றும் மாவட்ட நிலஅளவை அலுவலகத்திலும் மீளப்பெற முடியாத கொடுப்பனவாக 250 ரூபாவைச் செலுத்தி 2009.06.09 வரை அலுவலக நேரத்தின்போது பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.*

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச நில அளவை அலுவலகம் | விண்ணப்பப்பத்திரங்கள் கிடைக்கும் நிலையங்கள் | கேள்விமனு ஒப்படைத்தல் |
|---|---|---|---|---|
| வடமத்திய | பொல னறுவை | மெதிரிகிரிய | மாகாண நிலஅளவையாளர் நாயக அலுவலகம் (வடமத்திய மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (பொலன்னறுவை) | மாகாண நிலஅளவையாளர் நாயக அலுவலகம் (வடமத்திய மாகாணம்) 117, 119, ஹரிஸ்சந்திர மாவத்தை, அனுராதபுரம் |
| ஊவா | மொனரா கலை | சியம்பலாந்துவ | மாகாண நிலஅளவையளார் நாயக அலுவலகம் (ஊவா மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (மொனராகலை) | மாகாண நிலஅளவையாளர் நாயக அலுவலகம் (ஊவா மாகாணம்), தேவாலய வீதி, பதுளை |
| | அம்பாறை | அக்கரைப்பற்று | மாகாண நிலஅளவையாளர் நாயக அலுவலகம் (ஊவா மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (அம்பாறை) | |
| | பதுளை | பதுளை | மாகாண நிலஅளவையாளர் நாயக அலுவலகம் (ஊவா மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (பதுளை) | |
| மேல் | கொழும்பு | மொறட்டுவை | மாகாண நிலஅளவையாளர் நாயக அலுவலகம் (மேல் மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (கொழும்பு) | மாகாண நிலஅளவையாளர் நாயக அலுவலகம் (மேல் மாகாணம்), நிலஅளவையாளர் நாயகத்தின் அலுவலகம், இல. 150, கிருல வீதி, நாராஹேன்பிட்டி, கொழும்பு 5 |
| மத்திய | கண்டி | உடுநுவர | மாகாண நிலஅளவையாளர் நாயக அலுவலகம் (மத்திய மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (கண்டி) | மாகாண நிலஅளவையாளர் நாயக அலுவலகம் (மத்திய மாகாணம்), பார்ன்ஸ் கட்டிடம், கன்னொறுவ, பேராதனை |
| | மாத்தளை | நாவுல | மாகாண நிலஅளவையாளர் நாயக அலுவலகம் (மத்திய மாகாணம்), மாவட்ட நிலஅளவை அலுவலகம் (மாத்தளை) | |

*முத்திரையிடப்பட்ட மனுகோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பிரதேச நிலஅளவை அலுவலகங்களின் பயன்பாட்டிற்கு கட்டிடங்களை வாடகைக்கு விடுதல் (இடத்தின் பெயர் இங்கே குறிப்பிடுக)'' எனக் குறிப்பிட்டு 2009.06.10 அன்று பிற்பகல் 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டும் அல்லது நேரடியாக கையளிக்கப்பட வேண்டும். அதில் தேவையான சகல விபரங்களும் பூரணப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.*

*நிலஅளவையாளர் நாயகம்.*

*நிலஅளவையாளர் நாயகத்தின் அலுவலகம்,
இல. 150, கிருல வீதி,
கொழும்பு 05.*

*5-422*

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறியத்தருகிறோம் :*

*கம்பனி பெயர்* : எஸ்கேஎஸ் ஹோல்டிங்ஸ் (பிறை.) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ67647
*பதிவுசெய்யப்பட்ட முகவரி* : த பார்க்வே பில்டிங், 5 ஆம் மாடி, 48, பார்க் வீதி, கொழும்பு 08
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 27, ஏப்பிறல் 2009.

கோப்பரேட் எட்வைசரி சேர்விசஸ் (பிரைவேற்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

5-334

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 (1) இற்கமைய ''சென்ரல் புறொவின்ஸ் எக்ஸ்போட்டர்ஸ் சேம்பர்'' எனும் பெயரில் உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்று 29 ஆந் திகதி ஏப்பிறல் மாதம் 2009 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம்.

*கம்பனியின் பெயர்* : சென்ரல் புறொவின்ஸ் எக்ஸ்போரட்டர்ஸ் சேம்பர்
*கம்பனியின்இலக்கம்* : ஜீஏ 2253
*பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி* : இல. 228/2, டீ. எஸ். சேனநாயக்க வீதி, கண்டி

*சபையின் கட்டளைப்படி,*

பிறில்லியன்ற் புறொமோட்டர்ஸ் அன்ட் கன்சல்ரன்ஸ் (பிரைவேற்) லிமிட்டெட்.

5-351

---

## பொது அறிவித்தல்

இத்தால் கம்பனிகள் சட்டமூலம் இல. 7, 2007 ஆம் ஆண்டின் பிரிவு 9(1) இற்கு அமைவாக கீழ்குறிப்பிட்ட கம்பனி உத்தரவாதமுள்ள வரையறுக்கப்பட்ட கம்பனியாக 31 ஆந் திகதி பங்குனி 2009 அன்று பதிவுசெய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தரப்படுகின்றது.

*கம்பனியின் பெயர்* : இலங்கை பழவகை, மரக்கறி உற்பத்தி/ பதப்படுத்தல் மற்றும் ஏற்றுமதி யாளர் சங்கம் (வ-து)
*கம்பனியின் பதிவு இல.* : ஜீஏ 2244
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : 80, ரெக்லமேசன் வீதி, கொழும்பு 11

இயக்குனர்.

5-373

---

## பொது அறிவித்தல்

கம்பனிகளின் இணைப்பு

சிக்மா ஹோல்டிங்ஸ் (பீவீடி) எல்டீடி கம்பனி இல. பீ. வீ. எஸ். 2748, சிக்மா (என்ஜினியர்ஸ் என்ட் மெனிபெக்டரஸ்) எல் டீடீ கம்பனி இல. பீவீ. எஸ். 2634, கம்பனிச் சட்டம் இல. 7, 2007 ஆம் ஆண்டின் பிரிவு 242 (3) இன்கீழ் அறியத்தரப்படுவதாவது, ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனிகளான இல. பீ. வீ. எஸ். 2748 சிக்மா ஹோல்டிங்ஸ் (பீவீடீ) எல்டீடி இல. பீ. வீ. எஸ். 2634 சிக்மா (என்ஜினியர்ஸ் என்ட் மெனிபெக்டரஸ்) எல்டீடி என்பன கம்பனிச் சட்டம் இல. 07, 2007 ஆம் ஆண்டின் பிரிவு 242 இன்கீழ் ஒன்றாக இணைக்கப்படுகிறது.

இக்கம்பனிகளின் ஒன்றிணைப்பு பெயராக சிக்மா ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என்பது விளங்கும் என்பதோடு இவ்வொன்றிணைப்பானது 1 ஆந் திகதி ஏப்பிறல், 2009 முதல் செல்லுபடியாகும். அல்லது கம்பனி பதிவாளர் நாயகத்தினால் அனுமதி வழங்கப்படும் திகதியிலிருந்து செல்லுபடியாகும்.

இவ்வொன்றிணைக்கப்பட்ட கம்பனி ஆகிய மா ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினது விலாசம் இல. 32பி, ஹோட்டன் பிளேஸ், கொழும்பு 07.

*சபையின் கட்டளைப்படி,*

ஜே. வீ. ஆர். ஜோசப்,
கம்பனிச் செயலாளர்.

இல. 32பி, ஹோட்டன் பிளேஸ்,
கொழும்பு 07,
2009, பெப்புருவரி 18.

5-375

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு விதிகளுக்கமைய கீழே குறிப்பிடப்பட்ட பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பு அறிவித்தல் :

*கம்பனியின் பெயர்* : டபிள்யூ. டபிள்யூ. ஐ. இன்டஸ்றியல் இலெக்றிகல் (பிரைவட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ67636
*பதிவுசெய்யப்பட்ட முகவரி* : இல. 12, பழைய கிருளப்பனை வீதி, நுகேகொடை

பணிப்பாளர்கள்.

5-376

---

## ஓர் கம்பனியை கூட்டிணைத்தல்

2007 ஆம் ஆண்டின் கம்பனிகளைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 7 ஆம் இலக்க விதிகளின் பிரகாரமான பொது அறிவித்தல் :

*கம்பனியின் பெயர்* : எஃப்பெக்டிவ் இண்டஸ்ட்ரியல் (பிரைவட்) லிமிட்டெட்
*பதிவு இல.* : பீவீ67661

பதிவுசெய்யப்பட்ட விலாசம் : எச்/2/11, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 08

பணிப்பாளர்கள்.

5-377

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் கீழ்வரும் தனியார் பொறுப்பு வரையறுத்த கம்பனி 2009.03.16 ஆந் திகதியன்று கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது :

கம்பனியின் பெயர் : டிரேட், எல்கே (பிரைவட்) லிமிட்டெட்
கம்பனி இல. : பீவீ67306
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 104, கித்துல்வத்த றோட், கொழும்பு 08

எஸ்ஜே கோர்ப்பரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

லெவல் 04,
இல. 02, காசல் லேன்,
கொழும்பு 04.

5-382

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவிற்கமைய, கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கூட்டிணைத்தல் அறிவித்தல் இத்தால் தரப்படுகின்றது :

கம்பனியின் பெயர் : பிரகதி சேவா பதனம
பதிவு இல. : ஜீஏ2233
பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி : இல. 260, சரவஸ்திவாத்தா, சரவஸ்திபுர, அநுராதபுரம்
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 20 பெப்புருவரி, 2009.

சபையின் கட்டளைப்படி,

பிஸ்னஸ் சொலியுஷன் அன்ட்
செக்கரட்ரீஸ் (பீவீரீ) லிமிட்டெட்.

5-418

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவிற்கமைய, கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கூட்டிணைத்தல் அறிவித்தல் இத்தால் தரப்படுகின்றது :

கம்பனியின் பெயர் : எக்ஸ்பிலோசிவ்ஸ் கன்சல்ரேஷன் அன்ட் எப்பிலிகேஷன் கொழும்பு (பீவீரீ) லிமிட்டெட்
கம்பனியின் இல. : பீவீ 67586
பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி : 385/3, கோட்டே வீதி, கோட்டே
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 20 ஏப்பிறல் 2009.

சபையின் கட்டளைப்படி,

பிஸ்னஸ் சொலியுஷன் அன்ட்
செக்ரட்ரீஸ் (பீவீரீ) லிமிட்டெட்.

5-419

---

## அற்றோணித் தத்துவத்தினை இரத்துச் செய்தல்

இல. 67, தோர்லிவே, லொக்ரிஜ் டபிள்யூஏ 6064, வெஸ்டர்ன் அவுஸ்திரேலியா, அவுஸ்திரேலியாவில் வசிக்கும் ஸ்டனிஸ்லோஸ் சமுவேல் ஹாமர் ஆகிய நான், இல. 24, பீட்டர்ஸ் லேன், தெஹிவலையில் வசிக்கும் விவில் சின்கிளேயர் ஓபிரே பெரேராவிற்கு கொழும்பு பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தில் 2004.12.03 ஆந் திகதிய தொகுதி 267, பக்கம் 83 இல் பதிவுசெய்யப்பட்ட அற்றோணித் தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்கிறேன். குறித்த தத்துவக்காரரால் என் சார்பில் செய்யப்படும் எந்தச் செயலுக்கும் நான் பொறுப்பெடுக்க மாட்டேன் என்றும் அத்தகைய செயல்கள் அனைத்தையும் நான் அங்கீகரிக்க மாட்டேன் என்றும் இத்தால் சகலருக்கும் அறியத்தருகிறேன்.

ஸ்டனிஸ்லோஸ் சமுவேல் ஹாமர்.

5-425

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

கம்பனியின் பெயர் : ஆசியன் மார்கெட்டிங் அன்ட் சர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ67493
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 02.04.2009
பதியப்பட்ட கம்பனி அலுவலகத்தின் விலாசம் : 6ஏ, ஸ்ரீ சுனந்தாராம வீதி, களுபோவில, தெஹிவளை

செயலாளர்கள்.

5-449

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) இன் கீழ் அறிவித்தல்

கம்பனியின் பெயர் : விசன் மார்கெட்டிங் அன்ட் பிரின்டிங் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ67415
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 26.03.2009
கம்பனி பதிவுசெய்யப்பட்ட அலுவலக விலாசம் : இல. 73பி, மருதானை வீதி, ஹெந்தளை, வத்தளை

5-450

---

## அற்றோணித் தத்துவத்தினை இரத்துச் செய்தல்

கஹதுவ, மிரிஸ்வத்தையைச் சேர்ந்த (657930628 V) மத்தக்க கமகே சிரியலதா என்பவருக்கு என்னால் அளிக்கப்பட்ட, பிரசித்த நொத்தாரிசு முனிதாச ஹால்பன்தெனிய அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு, 2008, யூன் 23 ஆந் திகதி யிடப்பட்ட அற்றோணித் தத்துவ இல. 976 ஐக் கொண்ட அற்றோணித் தத்துவத்தை இரத்துச்செய்து இல்லா தொழிக்கிறேன் என இலங்கை குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

உதயங்க சூசித்த கலபொட ஆரச்சி,
மிரிஸ்வத்தை,
கஹதுவ.

2009.5.6.

5-461

### 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

*9 (1) ஆம் பிரிவின் பிரகாரம் பொது அறிவித்தல்*

*கம்பனியின் பெயர்* : எ த்றீ இன்ரநஷனல் லொஜிஸ்ரிக் (தனியார்)
*கம்பனி இலக்கம்* : பீவீ67697
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 04.05.2009
*கம்பனி பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 58/72, 1 ஆவது ஒழுங்கை, சோமதலகள மாவத்தை, பகிரிவத்த வீதி, கங்கொடவில, நுகேகொட

அமல்கமேற்றற் மனேஜ்மன்ற் சேர்விசஸ் (தனியார்),
செயலாளர்கள்.

இல. 96-2/2, புறொன்ட் வீதி,
கொழும்பு 11,
2009, மே 06.

5-454

---

### அற்றோணித் தத்துவம் நீக்குதலும் இரத்துச் செய்தலும்

ஐக்கிய இராச்சியம், கம்பர்லி, ஜீயு15 3பீயு, சவுத்வெல்பார்க் வீதி, "ட்றபோட்", தற்பொழுது கல்கிசை, அபேயவிக்கிரம வீதி, 25 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த குமாரசாமி சித்தரஞ்சன் (ஐக்கிய இராச்சியக் கடவுச்சீட்டு இலக்கம் : 070194611) ஆகிய நான், ஐக்கிய இராச்சியம், எஸ்டபிள்யூ 19 7கியுஏ லண்டன், விம்பில்டன், கொம்றன் வீதி, 49 ஆம் இலக்கம் தற்பொழுது கொழும்பு 06, பிறெடெறிக்கா வீதி, 21-3/4 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த நல்லதம்பி பரமசிவம் ஆகியவருக்கு சொலிசிட்டர், சத்தியப்பிரமாணம்பெற்ற நிர்வாகத்தர் சித்ரா சோமசுந்தரம் முன்பாக 2008 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 27 ஆந் திகதி நிறைவேற்றப்பட்ட அற்றோணித் தத்துவத்தில் குறித்த நல்லதம்பி பரமசிவத்திற்கு வழங்கப்பட்ட சகல உரிமைத் தத்துவங்களையும் ஏற்கனவே செல்லுபடியற்றதாக்கிவிட்டதென்றும் இத்தாலும் இரத்துச்செய்து செல்லுபடியற்றதாக்கிவிடுவதுடன் எனது அற்றோணித் தத்துவதாரராக எதிர்காலத்தில் அவர் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கைக்கும் நான் பொறுப்பேற்கமாட்டேன் என அறியத் தருகிறேன்.

குமாரசாமி சித்தரஞ்சன்.

5-458

---

### அற்றோணித் தத்துவம் நீக்குதலும் இரத்துச் செய்தலும்

இங்கிலாந்து, கம்பர்லி, ஜீயு15 3பீயு, சவுத்வெல்பார்க் வீதி, "ட்றபோட்", தற்பொழுது கல்கிசை, அபேயவிக்கிரம வீதி, 25 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த குமாரசாமி சித்தரஞ்சன் (ஐக்கிய இராச்சியக் கடவுச்சீட்டு இலக்கம் : 070194611) ஆகிய நான் இங்கிலாந்து, எஸ்டபிள்யூ19 7கியுஏ லண்டன், கொம்றன் வீதி, 49 ஆம் இலக்கம் தற்பொழுது கொழும்பு 06, பிறெடெறிக்கா வீதி, 21-3/4 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த நல்லதம்பி பரமசிவம் (ஐக்கிய இராச்சியக் கடவுச்சீட்டு இலக்கம் : 093145753) ஆகியவருக்கு சொலிசிட்டர், சத்தியப்பிரமாணம்பெற்ற நிர்வாகத்தர் இந்திரலோஜினி செபஸ்தியான் முன்பாக 2007 ஆம் ஆண்டு ஆடி மாதம் 02 ஆந் திகதி நிறைவேற்றப்பட்ட அற்றோணித் தத்துவத்தில் குறித்த நல்லதம்பி பரமசிவத்திற்கு வழங்கப்பட்ட சகல உரிமைத் தத்துவங்களையும் ஏற்கனவே செல்லுபடியற்றதாக்கிவிட்டதென்றும் இத்தாலும் இரத்துச்செய்து செல்லுபடியற்றதாக்கிவிடுவதுடன் எனது அற்றோணித் தத்துவதாரராக எதிர்காலத்தில் அவர் மேற்கொள்ளப் படும் எந்தவொரு நடவடிக்கைக்கும் நான் பொறுப்பேற்கமாட்டேன் என அறியத்தருகிறேன்.

குமாரசாமி சித்தரஞ்சன்.

5-459

---

## ஏல விற்பனைகள்

### ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ — பொலன்னறுவை கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**ஆதனம் ஏல விற்பனை**

**தமன்கடுவை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பொலன்னறுவை நிஸ்ஸங்கமல்லபுர கிராமத்தில் அமைந்துள்ள லொட் 768 எனும் காணி நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டதும் பொறுப்பில் வைத்திருக்கும் இ. கு. வ. 3950 ஐக் கொண்ட வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அத்துடன் அதனுள் அடங்கும் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும். இதன் விஸ்தீரணம் : 0.279 ஹெக்டயார் ஆகும்.**

*(இவ்வாதனம் குலபெந்த துரகே சிரிபால மற்றும் குருவத்தே விதான ராலஹாமிலாகே தொன் ரோஹினி ஜயதிலக்க ஆகியோர் கடப்பாடுடையவர்களாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்)*

**ஆதனத்தை வந்தடைதல்.**- பொலன்னறுவை நகரத்திலிருந்து டீ1 நீர்க்கால்வாய் பாதையில் சுமார் 2.5 கிலோ மீற்றர் தூரம் கல்தபராவ வரை சென்று நீர்க்கால்வாய் வழியாக அமைந்துள்ள சியவாச பாலத்தில் சற்று தூரம் சென்று இடதுபக்கமாக திரும்பி பன்சல வரை சென்றால் இவ்வாதனம் பன்சலைக்கு பின்புறமாக அமைந்துள்ளது.

இவ்வாதனம் 2009.06.11 ஆந் திகதி பி. ப. 3.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2009.03.13 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2009.03.23 ஆந் திகதிய "த ஐலன்ட்", "திவயின" மற்றும் 2009.03.24 ஆந் திகதிய "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் :-

கொள்வனவு விலையில் 10%; உள்நாட்டு வரி 1%; ஏல விற்பனையாளர் கட்டணம் 2 ½%; நொத்தாரிசு கட்டணம் ரூ. 2,000;

இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூபா 500; சகல பகிரங்கப்படுத்தல் செலவு, கொள்முதலில் மிகுதி 90%; விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீயில் செலுத்தப்படுதல் வேண்டும். மிகுதித் தொகையை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் செலுத்தப்பட்டுள்ள பணத்தொகையில் 10% இழக்கவேண்டி ஏற்படுவதுடன் இவ்வாதனம் மீண்டும் விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு உரிமை உண்டு.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- பிரதான முகாமையாளர் (கடன் அறவிடுதல்) ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10 உடன் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661821, 011-2661815.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால்
உத்தரவாதம் பெற்ற ஏலவிற்பனையாளர்.

இல. 83/5, போமலுவ பாதை,
வடபுலுவ,
கண்டி.
தொலைபேசி இல. 081-2211025, 071-4755974
பெக்ஸ் இல. : 081-2211025.

5-361

---

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ – மாத்தளை கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவு

**பெறுமதிமிக்க விவசாய சொத்து**

**பயிர்ச்செய்கை செய்யப்பட்ட பெறுமதிமிக்க விவசாய சொத்து மாத்தளை மாவட்டம், மத்திய மாகாணம், மாத்தளை வடக்கு, லெனதொர கிராமத்தில் மாத்தளை-தம்புள்ள பாதைக்கு மிகவும் கிட்டிய இடத்தில் அமைந்துள்ள "கெபிலிட்டிஹேன" எனும் காணி உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். அநுரரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1998.10.13 ஆந் திகதி 235 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட லொட் 01 எனும் காணி. இது 06 ஏக்கர் பரப்பளவானதாகும். அத்துடன் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், பயிர்கள், மரங்கள் மற்றும் சகலதுமாகும்.**

*(இவ்வாதனம் கந்தஉடகே சரத் சில்வா என்பவர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக வரையறுக்கப்பட்ட கொமர்ஷல் வங்கி பீஎல்சீ இனால் பெறப்பட்ட ஆதனம்)*

**காணியை வந்தடைதல்.**- மாத்தளை நகர மத்தியிலிருந்து தம்புள்ள பாதையில் சுமார் 36 கி. மீ. தூரம் பன்னம்பிட்டிய, 63/2, வாய்க்காலைத் தாண்டி சுமார் 100 மீற்றர் தூரம் சென்று வலதுபக்கமாக திரும்பி கிரலஸ்ஸ பாதையை அடைந்து சுமார் 300 மீற்றர் தூரம் சென்றால் இப்பாதைக்கு எல்லையானதாக இடதுபக்கமாக இவ்வாதனம் அமைந்துள்ளது.

இவ்வாதனம் 2009.06.25 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2008.07.25 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2008.07.09 ஆந் திகதிய "த ஐலன்ட்", "லக்பிம" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் :-

கொள்முதல் விலையில் 10%; உள்நாட்டு வரி 1%; ஏல விற்பனையாளர் கட்டணம் 2 ½%; நொத்தாரிசு கட்டணம் ரூ. 2,000; இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூபா 500; சகல பகிரங்கப்படுத்தல் செலவு, கொள்முதலில் மிகுதி 90%; விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் வரையறுக்கப்பட்ட கொமர்ஷல் வங்கி பீஎல்சீ தலைமை அலுவலகத்தில் அல்லது மாத்தளை கிளையில் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ லிமிட்டெட், ராஜ வீதி, மாத்தளை என்ற விலாசத்துடன் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல. : 066-2231880, 066-2222485, 066-2231870 ; பெக்ஸ் இல. : 066-2222204.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால்
உத்தரவாதம் பெற்ற ஏலவிற்பனையாளர்.

இல. 83/5, போமலுவ பாதை,
வடபுலுவ,
கண்டி.
தொலைபேசி இல. 081-2211025, 071-4755974
பெக்ஸ் இல. : 081-2211025.

5-363

---

## இலங்கை வங்கி

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

கடன் தொடர்பு இல. 173/2006

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2008.10.10 ஆந் திகதிய 1571 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2008.10.06 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினமின" "தினகரன்" பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக் கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 56, பன்னல றோட். குளியாப்பிட்டிய என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. ஜே. அல்பியஸ் பெரேரா 2009.07.30 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

*வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கட்டுகம்பொல ஹத்பற்று கட்டுகம்பொல கோரளை தெற்கில் கட்டிமஹனயில் அமைந்த "பதலவத்த" என யாவரும் அறிந்ததும் அழைக்கப்படுவதுமான காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஆர். எப். எச். பெர்ணாண்டோ தயாரித்த 1989.04.11 திகதியிட்ட வரைபடம் இல. 725 இல் விபரித்த துண்டு 2 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 725 இன் படி வடக்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 725 இல் துண்டு 1ம், டபிள்யு. எம். டிங்கிரி மெனிகாவின் காணியும் ; கிழக்கில் : டபிள்யூ. ஜே. ஜே. பெர்னாண்டோவின் காணியும் ; தெற்கில் : எல்லையும் ; மேற்கில் : வந்துரம்ப பிரதான பாதை வரை கம்சபா றோட்டும் எல்லைகளாகக் கொண்டு ஒரு ஏக்கர் மூன்று றூட் இருபது தசம் எட்டு பேர்ச்சுகள் (1ஏ.3றூ.20.8பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது குளியாப்பிட்டி மாவட்ட காணிப்பதிவகத்தில் கே 138/108 இல் பதிவுசெய்யப்பட்டது.*

*இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபைக் கட்டளைப்படி,*

*திருமதி எஸ். சீ. என். சுவர்ணகாந்தி,*
*முகாமையாளர்.*

*இலங்கை வங்கி,*
*தும்மலசூரிய.*

*5-369*

---

**மக்கள் வங்கி – மன்னார் கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

**ஆதனம் ஏல விற்பனை**

***மன்னார் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மன்னார் நகரில் அலமரா வீதியில் அமைந்துள்ள மாடிக்கட்டிடம் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எஸ். கொடுதொரை என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1983.02.26 ஆந் திகதியிடப்பட்ட 12 ஆம் இலக்க வரைபடத்தின்படி குறிப்பிடப்பட்ட காணி அண்மையில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. என். சுகுமார் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2004.01.24 ஆந் திகதிய 2401 எம். என். இலக்கம் கொண்ட வரைபடத்தின்படி 2.17 பேர்ச்சஸ் விசாலம் கொண்ட காணியும் அதனுள்ளடங்கும் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும்.***

*(இவ்வாதனம் சௌந்தரராஜா ரங்கராஜா, ரங்கராஜா யோகம்மா மற்றும் ரங்கராஜா தவராஜன் என்பவர்கள் கடனாளிகளாக மக்கள் வங்கியினால் பெறப்பட்ட கடன் வசதிகளுக்காக மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்)*

***ஆதனத்தை வந்தடைதல்.-*** *மன்னார் மக்கள் வங்கிக் கிளையிலிருந்து அலமரா வீதி வழியாக மேற்குப் பக்கமாக சுமார் 100 மீற்றர் தூரம் சென்றால் இந்த வீதிக்கு எதிர்த்ததாக இடதுபக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது.*

*இவ்வாதனம் 2009, யூலை 22 ஆந் திகதி பி. ப. 1.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.*

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-*** *2009.01.23 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2009.01.07 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", 07.01.2009 ஆந் திகதிய "தினமின" பத்திரிகைகளையும் 07.01.2009 ஆந் திகதிய "தினகரன்" பத்திரிகையையும் பார்க்கவும். விற்பனை பற்றிய அறிவித்தலுக்கு 22.05.2009 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் பார்க்கவும்.*

***கொடுப்பனவு முறை.-*** *விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் :-*

*கொள்முதல் விலையில் 10%, உள்நாட்டு வரி 1%, ஏலவிற்பனையாளர் கட்டணம் 2 1/2%, நொத்தாரிசு கட்டணம் ரூ. 2,000, இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 500, சகல பகிரங்கப்படுத்தல் செலவு, கொள்முதலில் மிகுதி 90%, விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் மக்கள் வங்கி மன்னார் கிளையில் அல்லது வவுனியா பிரதேச முகாமையாளருக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.*

*உரித்தாதனம் மற்றும் விபரங்களை அறிவதற்கு.- பிரதேச முகாமையாளர் (வன்னி), மக்கள் வங்கி, இல. 91/1, புகையிரத நிலைய பாதை, வவுனியா, தொலைபேசி இல. : 024-2222972.*

*மேற்குறிப்பிட்டவாறு மிகுதித் தொகையை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் செலுத்தப்பட்டுள்ள பணத்தொகையில் 10% இழக்கவேண்டி ஏற்படுவதுடன் இவ்வாதனத்தை மீண்டும் விற்பனை செய்வதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.*

*ஐ. டபிள்யூ. ஜயசூரிய,*
*நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால்*
*உத்தரவாதம்பெற்ற ஏலவிற்பனையாளர்.*

*இல. 83/5, போமலுவ பாதை,*
*வட்டபுலுவ,*
*கண்டி,*
*தொலைபேசி இல. : 081-2211025, 071-4755974*
*பெக்ஸ் இல. : 081-2211025.*

*5-383*

---

**மக்கள் வங்கி – காலி மஹ வீதி கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தமான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள் ஏல விற்பனை**

*மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2009.06.10 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு இங்கு கீழ் குறிப்பிடுகின்ற சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.*

### ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விபரம்

தென் மாகாணத்தின் காலி மாவட்டத்தில் காலி சதரைக்குள் ஹாலிஎல கிராமத்தில் அமைந்துள்ள ஹாலியகஹதெனிதுவ அல்லது தெல்கஹதுவ துண்டைப் பிரித்து வேறாக்கப்பட்ட பத்து தசம் ஐந்து சைபர் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 10.50பே.) எனும் மிகப்பெரிய இலக்கம் 03 எனும் காணியும் அங்குள்ள அனைத்து பழவர்க்கங்கள், கட்டிடங்கள் உட்படவும்.

மேலதிக விபரங்களுக்கு 2008.01.18 ஆந் திகதிய அரச வர்த்தமானிப் பத்திரிகையிலும், 2008.03.24 ஆந் திகதிய "தினமின", "டெய்லி நியூஸ்", "தினகரன்" போன்ற சஞ்சிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட ஏலவிற்பனைப் பகுதியைக் கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்**.- காலி-உடுகம வீதியில் 3 மைல்களுக்குச் சென்று இடப்பக்கமாக இருக்கும் படதுவ டீ. எஸ். ஐ. தொழிற்சாலைக்கு பக்கமாகச் சென்று அவ்வீதியில் 1/2 மைல் அளவு செல்ல இடப்பக்கமாக விழும் வீதியில் மலையைத் தாண்டியதும் குறிப்பிட்ட காணியைக் காணலாம்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை**.- வெற்றிபெற்ற கொள்வனவாளரினால் ஏலவிற்பனை இறுதியில் கீழ்கண்டபடி பணமாக செலுத்தவும் :-

(1) கொள்வனவு விலையில் 10% ;
(2) உள்ளூர் அதிகாரியின் வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு விற்பனை விலை 1%;
(3) ஏலவிற்பனையாளர் தரகு என விற்பனை விலையில் 2 1/2%;
(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;
(5) விற்பனைச் செலவும் வேறு கட்டணம் இருப்பின் அவையும் ;
(6) விற்பனை உறுதிப்பத்திரத்திற்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையில் மீதி 90% க்கான விற்பனைத் திகதிக்குரிய காலி பஹல டிக்சன் வீதி இலக்கம் 22 எனும் நிலையத்திலிருக்கும் "மக்கள் வங்கியின் பிரதேச பிரதான அலுவலகத்தின் பிரதேச முகாமையாளர்" அவர்களுக்கு செலுத்துக. தொலைபேசி இல. : 091-2232311, 2234785, 2234171, 2223564 ; பெக்ஸ் இல. : 091-2232230.

உரிமை கோறும் ஒப்பினையையும் மேலதிக விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறலாம்.

மேற்படி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறின் தற்போதைக்கும் செலுத்திய 10% க்கான பணத்தை திரும்பவும் செலுத்தாதுவிடின் தற்போதைக்கும் அச்சொத்துக்களை விற்பனை செய்ய வங்கிக்கு உரிமை உண்டு.

ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதவான்),
அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி இல. : 041-2228731.

5-393

### மக்கள் வங்கி - ஹிக்கடுவை கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தமான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்*

### சொத்துக்கள் ஏல விற்பனை

*ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விபரம்*

1. தென் மாகாணத்தின், காலி மாவட்டத்தின் வெல்லபட பத்துவை படுவனயில் அமைந்துள்ள வெலேபட மிதிகஹவத்த எனும் காணியின் ஒன்றிணைக்கப்பட்ட துண்டான ஏ, 2ஏ, 3ஏ எனும் 39.4 பேர்ச்சஸ் கொண்ட மிகப்பெரிய காணியும் அனைத்துப் பயிர்ச்செய்கை, கட்டிடங்கள் உட்படவாகும்.

2. மேலே குறிப்பிட்ட படுவனயில் அமைந்துள்ள வெலபட மிதிகஹவத்த லொட் 5 இல் லொட் டீ இனால் பிரிக்கப்பட்ட லொட் 1 எனும் 32.833 பேர்ச்சஸ் கொண்ட மிகப்பெரிய காணியும் அதிலுள்ள அனைத்துமாகும்.

மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் என்னால் 2009.06.24 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு இங்கு கீழ் குறிப்பிடுகின்ற சொத்துக்கள் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு**.- 1995.12.15 ஆந் திகதிய அரச வர்த்தமானப் பத்திரிகையிலும் 1995.12.01 ஆந் திகதிய "தினமின", "டெயிலி நியூஸ்", "தினகரன்" ஆகிய சஞ்சிகைகளிலும் பிரசுரமாகிய ஏலவிற்பனைப் பகுதியைக் கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்**.- கொழும்பிலிருந்து காலிக்குச் செல்லும்போது தொடந்துவ படுவத பகுதிக்குச் செல்லும்போது காணப்படும் ஓசன் பீச் கிளப் ஹோட்டல் அருகாமையில் (இதற்கு முன்னர் கி. மீ. 102 கனுவுக்கு) அருகே வீதியின் கடற்கரைக்கு முன்னாக இச்சொத்துக்கள் அமைந்திருக்கும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை**.-வெற்றிபெற்ற கொள்வனவாளரினால் இறுதியாக கீழ்கண்டபடி பணமாக செலுத்தல் வேண்டும்:-

(1) கொள்வனவு விலையில் 10% ;
(2) உள்ளூர் அதிகாரியின் வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு விற்பனை விலையில் 1%;
(3) ஏலவிற்பனையாளர் தரகு என கொள்வனவு விலையில் 2 1/2%;
(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;
(5) விற்பனைச் செலவும் வேறு கட்டணம் இருப்பின் அவற்றுக்கான பணம் ;
(6) விற்பனை உறுதிப்பத்திரத்திற்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையில் மீதி 90% க்கான பணம் விற்பனைத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள்) "காலி, பஹல டிக்சன் வீதியில் அமைந்துள்ள இல. 22 இல் மக்கள் வங்கிப் பிரதேச பிரதான அலுவலகத்தின் முகாமையாளர்" அவர்களுக்கு செலுத்துக. தொலைபேசி இல. : 091-2223563, 2232311, 2234171, 2234174 ; பெக்ஸ் இல. : 091-2232230.

உரிமை கோறும் ஒப்பினையையும் மேலதிக விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறலாம்.

மேற்குறிப்பிட்டபடி பணம் செலுத்திய 10% க்கான பணத்தை செலுத்தாது விடவும் மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.

ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதவான்),
அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளரும் மதிப்பீட்டாளரும்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி இல. : 041-2228731.

5-399

---

## டி. எப். சி. சி. வங்கி

(முன்பு அபிவிருத்தி வர்த்தக கோப்பரேசன் சிலோன்)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடற்படல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரகாரம் பகிரங்க ஏல விற்பனை

**விலைமதிப்புமிக்க ஆதனம் ஏல விற்பனை**

1. வடமத்திய மாகாணம், அனுராதபுரம் மாவட்டம், ஹொரவபொத்தான மாவட்ட செயலாளர் டிவிசன் உரலு பலித்த கிராம செயலாளர் டிவிசன் இல. 27 இல் வடிகவே கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் அதிபரின் உத்தரவின்பேரில் நிலஅளவையாளர் எஸ். ஜெகதீசனின் வெலண்காய என்ற காணியின் கடைசி கிராம வரைபட இலக்கம் எப்விபி 1357 இல் காண்பிக்கப்பட்ட லொட் 251 என்ற காணித்துண்டு (இக்காணியில் அமைந்துள்ள எல்லாம் சேர்த்து)

(காணியின் விஸ்தீரணம் : 1ஏ. 1றூ. 34பே.)

2. வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், கல்னாவ மாவட்ட செயலாளர் எல்லையில் நாகம்பா கோரலயில் லொலுகள்வவ கிராம செயலாளர் டிவிசன் இல. 469 இல் இயல புலண்வே கிராமத்தில் அமைந்துள்ள இலங்கை குடியரசு சனாதிபதி அவர்களால் 1995.07.27 ஆந் திகதி வழங்கப்பட்ட இலக்கம் என்யூ/ஜீஎல்/பீஆர் 78 உறுதிமூலம் வழங்கப்பட்ட நிலஅளவையாளர் அதிபரினால் 1994.08.14 ஆந் திகதியுடைய பட இலக்கம் 21 மற்றும் கடைசி கிராம வரைபட இலக்கம் 975 இல் காண்பிக்கப்பட்ட காணித்துண்டு 726 (இக்காணியில் அமைந்துள்ள எல்லாம் சேர்த்து)

(காணியின் விஸ்தீரணம் : 0.268 ஹெக்டயார்)

*(மேற்படி காணியை உபாலி டெயிலர்ஸ் என்ற பெயரில் தனி உரிமையாளராக வியாபாரம் செய்யும் தணசூரிய முதியான்சேலாகே ரணசிங்க உபாலி தனசூரிய என்பவர் மேற்படி காணியை டி. எப். சி. சி. வங்கிக்கு ஈடுவைத்துள்ளார்.)*

மேற்படி காணியை தனசூரிய முதியான்சலாகே ரணசிங்க உபாலி தனசூரிய மற்றும் கட்டயம் மேஸ்திரிலாகே புண்சிநோனா என்பவரினால் மேற்படி காணி டி. எப். சி. சி. வங்கிக்கு ஈடுவைக்கப் பட்டது. புல்நாவ/லொலுகஸ்வே காணிகள் (விஸ்தீரணம் : 0.268 ஹெக்டயார்) 2009.06.12 ஆந் திகதி பிற்பகல் 12.30 மணிக்கு மற்றும் ஹொரவபொத்தான/வெலன்தாயாய விஸ்தீரணம் (1ஏ. 1றூ. 34பே.) 2009.06.12 ஆந் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு என்னால் பகிரங்க ஏலம்மூலம் அதே இடத்தில் விற்கப்படும்.

**கட்டணம் செலுத்தும் விதம்.-** உத்தேச கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் தொகைகளை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10%;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000 ;
(5) இலிகிதர் கட்டணம் ரூபா 500 ;
(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்;
(7) மிகுதி 90% ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் மற்றும் சட்டப்படி அறவிடும் தொகைகள் வரி, வட்டி எல்லாம் சேர்த்து செலுத்த வேண்டும்.

வேறு விபரங்களுக்கு :

டி. எப். எப். சி. வங்கி தொலைபேசி மூலமாக,
தொலைபேசி இல. : 2442442.

எல். பி. சேனாநாயக்க
(சமாதான நீதவான்),
மூத்த உத்தரவுபெற்ற ஏலதாரர்,
விலைமதிப்பிடுநர், நீதிமன்ற ஆணையாளர்
வர்த்தக மேல் நீதிமன்றம், கொழும்பு
மாவட்ட நீதிமன்றம்.

இல. 99, புதுக்கடை வீதி,
கொழும்பு 12,
தொலைபேசி /பெக்ஸ் : 2445393

5-408

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி – அம்பலன்கொட கிளை

தென் மாகாணம், காலி மாவட்டம், வெலபொடபத்தது அம்பலன் கொட நகர சபை எல்லைக்குள் அம்பலன்கொட பட்டிபண்டிமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள காலி மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம் 33965 இல் இணைக்கப்பட்டுள்ள நிலஅளவையாளர் சி. டி. எஸ். கிணிகேயின் 1935.07.24 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 295 இல் காண்பிக்கப்பட்டுள்ள பிட்டியவத்த அல்லது மாகெதரவத்த காணியின் 1/12 இல் பங்கு 1/3 காணியின் லொட் பி, இக்காணி அமைந்துள்ள கட்டிடங்கள் எல்லாம் சேர்த்து

(விஸ்தீரணம் - 0ஏ.0றூ.9.302பே.) ஏல விற்பனை

*(கடன் எடுத்த லொக்கு கண்கானம்கே பிரதீப் அமேந்திர பீரிஸ் என்பவர் மேற்படி காணியை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சிக்கு ஈடுவைத்துள்ளார்.)*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க்

ஒப் சிலோன் பி. எல். சி. மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனங்களை அதே இடத்தில் 2009, 06.16 ஆந் திகதி காலை 11.30 மணிக்கு என்னால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக**.- 2008.04.25 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியும் 2008.04.28 ஆந் திகதியுடைய "த ஐலண்ட்" "லக்பிம" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் ஏலவிற்பனை விளம்பரத்துக்காக 2009.05.22 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் மற்றும் 2009.05.27 ஆந் திகதியுடைய "த ஐலண்ட்", "திவயின" பத்திரிகைகளையும் தயவுசெய்து பார்க்கவும்.

**காணிக்கு செல்லும் விதம்**.- பழைய கொழும்பு வீதி, காலி வீதி, பிரதான வீதி, 23 ஆம் வீதி முன்பு 24 அடி பரப்பு வரைபடம் மூலம் இப்பாதை சட்டப்படி வாகனங்கள் செல்லும் வீதி.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்**.- ஏலவிற்பனையின் இறுதியில் உத்தேச கொள்வனவாளர் பின்வரும் கட்டணங்களை பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிக்கான விற்பனை வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000 ;
(5) விற்பனை நிமித்தம் ஏற்படும் எல்லா விளம்பரச் செலவுகள் ;
(6) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
